

முளாய் சுழிபுரம்

வேளாண் குல திலகரான நரசிங்க முதலி வழி வந்த அமரர்கள்

# திரு சம்பு கணபதிப்பிள்ளை

# ... ணபதிப்பிள்ளை சத்தியலட்சுமி

ன் மறைவு குறித்து முகிழ்த்த எழுந்த

# ... னைவு மலர்

03-08-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்



பாசத்தின் பிணைப்பால்
உலக வாசத்தில் இணைந்த
எம் அன்புத் தெய்வங்களே
உம் நேசத்தால் இம்
மண்ணில் வந்த
ஆசைக்குழந்தைகள் நாம்
இன்று ஆராத அன்புடன்
அழகிய மலராக உம்
நினைவுக் கோலத்தை தீராத
காதலுடன் திருவடியில்
இட்டு தினமும் வணங்கும்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்கள் திரு. தம்பு கணபதிப்பிள்ளை
திருமதி கணபதிப்பிள்ளை சத்தியலட்சுமி தம்பதிகள்





| | |
|---|---|
| **திரு.த.கணபதிப்பிள்ளை அவர்கள்** | **திருமதி க.சத்தியலட்சுமி அவர்கள்** |
| **புவியில் பூத்தது** | **புவியில் பூத்தது** |
| **08-06-1906** | **17-09-1921** |
| **பொன்னுலகுபெற்றது** | **பொன்னுலகுபெற்றது** |
| **02-07-2002** | **05-07-2002** |
| **அகவை : 96** | **அகவை : 82** |

## திதிப்பாக்கள்:

**அமரர் திரு.தம்பு. கணபதிப்பிள்ளை அவர்கள்**

**சீர்மேவும் சித்திர பானுவின் கூறாம்**
**கதிர் மேவு வேணில் கூடும் ஆனி -மாதத்து**
**மதி மலரும் அட்டமி திதியதனில் நல்ல**
**கணபதிப்பிள்ளை பெற்றான் (அமரப் பேறு)**

**அமரர் திருமதி கணபதிப்பிள்ளை சத்தியலட்சுமி அவர்கள்**

**சித்திர நல்லாள் செய்யாள் சத்தியலட்சுமி**
**சித்திர பானுவின் சுந்தரத் திங்கள் திகழும் -ஆனியில்**
**மதி தோயும் முடி முதல்வன் கதி கண்டாள்**
**மதி தேயும் தசமி தினத்தன்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்சபுராணம்



### விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வளிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

## தேவாரம்

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூருளானே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேனார்க் கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீயருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரிவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே விசையுமா றிசையே

### திருப்பல்லாண்டு

நிட்டையிலா உடல் நீத்து எனையாண்ட
நிகரில்லா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கு என்னகம் நெகவூறும்
அமிர்தனுக்கு ஆலநிறப் பட்டனுக்கு
என்னைத்தன் பால் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகணைப் போற்றி செய்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித்திருநகை அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குரபர - எனவோதும்
முக்கட்பரமற்குச் சுருதியின் முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்து முகவர்க்கத் தமரரும் - அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு ஒற்றைக்கிரி மத்தைப்
பொருதொரு பட்டப்பகல் வட்டத் திகிரியில் - இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய பச்சைப்புயல் மெச்சத்
தகுபொருள் பட்சத் தொடு ரட்கித் தருள்வதும் - ஒரு நாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர நிர்த்தப்பதம் வைத்துப்
பயிரவி திக்கொக்க நடிக்கக் கழுகொடு - கழுதாடக்
திக்குப்பரி அட்டப்பயிரவர் தொக்குத் தொகு தொக்குத்
தொகு தொகு சித்ரப் பவுரிக்குத் ரிகடக - எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை குக்குக்குகு குக்குக்குகு
குகு குத்திப்புதை புக்குப் பிடியென - முதுகூகை
கொட்புற்றெழ நட்பற்றவுணரை வெட்டிப்பலியிட்டுக்
குலகிரி குத்துப்பட ஒத்துப் பொரவல - பெருமானே

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# விநாயகர் கவசம்



வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மகோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் வியங்கியகா
சிபர்காக்கப் புரவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க 1

கவின்வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கீரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க 4

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் வர்த்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க 5

அக்கினியிற் சித்தீசர் காக்கவும்
உமா புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனமேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னர்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசதந் தனரே காக்க. 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓசையினவிக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினியே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க 7

மதிஞானந் தவந்தனா மானமொழி
புகழ்குலம்வண் சரிர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலாம் மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க 8

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெல்லாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பாவிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும். 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை

# கந்தர் ஷஷ்டி கவசம்



காப்பு

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை

**குறள் வெண்பா**

*அமரர் இடர்தீர் அமரம் புரிந்த*
*குமரன் அடிநெஞ்சே குறி*

**நிலைமண்டில ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக.
சரவண பவனார் சடுதியில் வருக.
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
வணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நவமணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநொதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரி முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவனிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள்நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுத் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
என்னைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்தங்குஅருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்துஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத்து ஆட்கொள்ள எந்தன் உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(முற்றும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் நரசிங்க முதலி வழிவந்த சைவ வேளான்குல திலகர் அமரர்கள் திரு. தம்பு கணபதிப்பிள்ளை, திருமதி கணபதிப்பிள்ளை சத்தியலட்சுமி தம்பதியினரின் வாழ்வியல் வனப்பம்

கன்னித்தமிழ் கவினுறவே காலம் காலமாய் ஒலித்திடும் ஈழவள நாட்டின், அனைத்து வளங்களும் கொண்டு தானே தனை நிகர்த்து தரணியில் தனித்து விளங்கும் யாழ் மண்ணில், மண்டு புகழுடன் மாறாத் தொன்மையுடன் மன்னித் திகழ்வது மூளாய் எனும் தொல்பதி ஆகும். பெருமை கொண்ட அப்பதியில் சீர்மிகுந்த நரசிங்க முதலி வழித்தோன்றலும் பிரபல சைவவேளான்குல மரபினரான சிறிமான் தம்பு அவர்களுக்கும், அவரது துணைவியார், இராசநாயகம் முதலி வழித்தோன்றலான முத்துப்பிள்ளை அவர்களுக்கும் அருந்தவப் புதல்வனாக அமரர். திரு.கணபதிப்பிள்ளை அவர்கள் 1906.06.08ம் திகதி அன்று அவனியில் பிறந்தார். உத்தமமான பூராட நட்சத்திரத்தில் பூரணப் பொலிவுடன் உதித்த இவருடனே உடன் பிறந்த உயிர்ப்பிறப்புக்களாக திருமதி.ந. செல்லமுத்து, க. பராசக்தி ஆகிய அன்புச் சோதரர்கள் தோன்றி அனைத்துப் பெருமைகளையும் அவருக்களித்தனர். நகமும் சதையும்போல் நல்ல உறவுகளாய் நலமிகு அன்புடன் அமரர் வாழ்வில் அன்பால் பிணைந்தனர்.

விளையும் பயிர் முளையின் முனைப்பில் முகிழ்ந்து நிற்கும் என்பதற்கு இணங்க பிள்ளைப் பருவத்தே திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். ஆரம்பக்கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கவினுறக்கற்ற அமரர் அவர்கள் தனது மேற்கல்வியை சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் கற்று கல்வியில் மேன்மை பெற்றார். வளம்பல நிறைந்த நலம் சிறந்த குடும்பத்தில் தோன்றிய திரு.கணபதிப்பிள்ளை அவர்கள் கடமையே மனித வாழ்வின் கண்ணும் கருத்தும் என்பதற்கிணங்க உத்தியோக புருஷராக மலேஷிய நாட்டில் உருவாகி உலாவினார். அங்கு மின்சாரத்திணைக்களத்தில் இலிகிதராக பணிபுரியும் பெருமை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பால் உயர்ந்து, வளம் பல நிறைந்து, காளைப்பருவத்தில் கனிந்து நின்ற இவரை இல்வாழ்வு என்ற நல்லறம் இனிமையுடன் அழைத்தது. அவ்வேளை மலேஷியா மண்ணில் மாண்புடன் விளங்கிய, மூளாய் எனும் தம் மூரைச் சேர்ந்த இராசநாயகம் முதலி வழித்தோன்றலும் ஆகிய திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி நாகமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரியாய் அருமையும் பெருமையும் பொருந்தி விளங்கிய செல்வி சத்தியலட்சுமி அவர்களை 1935ம் ஆண்டு ஆவணித் திங்களில் திருமணம் புரிந்து இல்லறவாழ்வில் இனிதே நுழைந்தார். இல்லறம் என்ற நல்லறக் கடமையை பலரும் போற்ற பாங்குடன் நடாத்திய அமரர் வாழ்வில் பக்கபலமாய் பசுமை வளங்கியவர் அவருடைய பத்தினியார் சத்தியலட்சுமி. சத்தியமாய், - சத்தாய், இலட்சியமாய், - இலட்சுமிகரமாய் தன்னுடன் இணைந்த தம் அருமைத்துணை மூலம் அமரர் தன் நன்கலமாக நன்மக்கள் நால்வரை நலமுடன் பெற்றார். தவஞான முத்துமலர், தயாபரமூர்த்தி, சிவயோகஇன்பமலர், மனோகரசிவம் என பொருள் பொதிந்த திருப்பெயர்களுடன் உருப்பெற்ற இவர் புத்திரர்கள், புதல்விகள் பெயருக்கேற்ற பெருமக்களாக பாரில் பெருமை பெற்று விளங்கினர். அருமையாய் பெற்ற தம் அருந்தவ புதல்வர்கள் நால்வரையும் நல்ல வண்ணம் நானிலத்தில் வாழ அவர்கள் எண்ணிய வண்ணம் கல்வியும் செல்வமும் அவர்களுக்கு செவ்விதாய் வழங்கினர். "மங்கல மென்ப மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன்மக்கட் பேறு" என்ற வள்ளுவன் வாய்மொழி -- இவ்வேளை அமரர் வாழ்வில் பொருந்தி அமைந்து பெருமை பெற்றது.

"பருவத்தே பயிர் செய்" என்று பாரில் பலகாலும் பயிலும் பழமொழிக்கு இணங்க உருவத்தில் உயர்ந்து அழகில் சிறந்து, அறிவில் செழித்து, காண்போர் அனைவரையும் கவரும் மாண்புடன் மிளிர்ந்த தன் மக்கட் செல்வங்கட்கு மணவினையும் பெருமையுடன் திருவுடன் திகழ திருப்தியாய் நடத்தினார். இவ்வகையில் முறையே உதயசங்கரன், யோகேஸ்வரி, நாகராஜா, சாந்தகுமாரி எனப்பெயர் கொண்ட உயர்குல மக்களைத் தன் பிள்ளைகட்கு வாழ்க்கைத்துணையாக தன் பெருமைமிக்க மருமக்களாகக் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் மக்கட் செல்வங்களின் மணவாழ்வில் முகிழ்ந்த முத்துக்களாக பேரப்பிள்ளைகளான சிவசங்கரன், நிரஞ்சலா, புவிதரன், கோஷிதரன், பஹிதரன், கிரிதரன், சசிதரன், கஜீபன் நிலாந்தி ஆகிய பிள்ளைகளை வாழ்வில் கண்டு பேரானந்தம் கொண்டார். ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, மூங்கில்போல் சுற்றம் சூழ தன்வீட்டு முற்றம் முழுதும் உறவுகளாய் நிரம்பி வழிய வளமான வாழ்வு கொண்டார். அமரர் திரு.த. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது உறவில் வாழ்வில் நிறைவு கண்ட அமரர் அவர்கள் 1958ம் ஆண்டில் தனது உத்தியோகவாழ்வில் இருந்து ஓய்வு பெற்று மலேஷிய நாட்டில் இருந்து தமது தாயகத்திற்கு திரும்பி வந்தார். அக்காலத்தின் பின் குடும்பத்தை வளர்ப்பதிலும், தான் வாழ்ந்த கிராமத்தின் வளர்ச்சியிலும் அமரர் தன் கருத்தையும் கடமையையும் செலுத்தினார். பக்தி மணத்தில் தன் மனத்தை இருத்தி மனித இனத்தின் முத்திக்கு வித்திடும் வித்தக கடவுளான மூளாய் சித்திவிநாயகனின் பக்தியில் தனித்துயர்ந்து விளங்கினார். நடமாடும் தெய்வங்களான தன் பெற்றோரைப் பேணிய அமரர் குல தெய்வமான விநாயகப்பெருமானின் ஆலயச் சேவையிலும் தன் இயலுமை உள்ளவரை அயராது ஈடுபட்டார். கூடவே ஆனைமுகனின் அன்புத் தம்பியாய் அனவரதமும் தன் அன்பருக்கு அருள் புரியும் ஆறுமுகனின் ஆலய சேவையிலும் பணிபுரிந்தார். இவ்வகையில் சித்திவிநாயகப் பெருமானின் தெற்கு மண்டப பராமரிப்பு அங்கு இடம்பெறும் விசேடபூசை (இக் கைங்கரியம் இவரின் மூதாதையரால் தொடக்கப்பட்டு தொடர்கிறது) தினசரி அர்த்தசாமப்பூசை, ஆகிய ஆலய அறகடமைகளையும், வைகாசி, ஐப்பசி மாத சதுர்த்தி உற்சவங்களையும் மற்றும் முருகப்பிரான் ஆலயத்திற்கான தைமாதக் கார்த்திகைப் பூசைக் கருமங்களையும் கண்ணும் கருத்துமாக நடத்துவித்து வந்தார்.

தெய்வக்கருமங்கள் ஒருபுறம் சமூக சேவைப்பணிகள் மறுபுறம் என தன்னை உலக வாழ்வில் நிலைநிறுத்திய அமரர் அவர்கள் ஈருடலும் ஓருயிரும் போல் தன் இல்லாளுடன் இனிய இல்லறம் நடத்தினார். தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தன் குடும்பம் என ஐந்திடத்தும் அரும்பணி புரிந்து உயர்ந்தவர் அமரர் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் பிறைகண்ட அரும்பேறு பெற்றவர் திரு தம்பு கணபதிப்பிள்ளை அவர்கள். தன்னுடைய முதுமைக்காலத்தின் கடைசிப்பருவத்தில் கூட இனிய மனையாள் சேவைசெய்ய, அன்பு மக்கள் பணிந்து போற்ற, பேரப்பிள்ளைகள் உறவுபாராட்ட, உத்தமமான உலக வாழ்வில் உவகையும் திருப்தியும் கண்டார். வந்த கடமையிலும் வாழ்வில் வளமையிலும் முழுமைகண்ட திரு.த.கணபதிப்பிள்ளை அவர்களை அவர்கள் குல தெய்வமான கணபதிக்கடவுள் தன் கருத்தில் கொண்டார். உலக வாழ்விற்கான விடுதலை அழைப்பு அத்தனையும் தளராது அவர் ஏற்றார். தன்பதி உடலால் பழுதுபட்டு இருந்தும் அவர் பக்கத்தே இருந்து அனுதினமும் பதி சேவையே தன் கதி என அவர் துணைவியார் சத்தியலட்சுமி அவர்கள் சத்திய வாழ்க்கை நடாத்தினார். என்ன அதிசயம்! - உலகில் மிக அருமையாக நடக்கும் நிகழ்வுகளில் இதுவும் ஒன்று என எவரும் எடுத்து இயம்பிப் போற்றும் வண்ணம் இணைபிரியாத அன்றில்களாக அன்றும் இன்றும் வாழ்ந்த அந்த அன்புத் தம்பதிகள் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்தனர். ஓம்! தன்பதி இறைநிலை அடையப் போகிறார் என்ற உணர்வில் தன் உணர்வு ஒடுக்கிய மனைவியார் சத்தியலட்சுமி அவர்கள் தன்பதியின் மறைவுக்கு காத்திருந்தார். பூவுலகிலே பூவும் மணமுமாய் பொருந்திய அந்த இரு உயிர்களும் பொன்னுலகிற்கும் அதுபோலவே நடைகொண்டன. திரு. தம்பு கணபதிப்பிள்ளை அவர்கள் ஆனிமாத அமரபக்க அட்டமித் திதியிலே சித்திவிநாயகப்பெருமானின் திருவடிநிழலை அடைந்தார். அமரர் அவர்களின் தூய உடல் அக்கினியில் சங்மித்த அடுத்த பொழுதில் அவரது அன்புத் துணைவியார் திருமதி கணபதிபிள்ளை சத்தியலட்சுமியம்மா அவர்களின் இன்னுயிரும் தன் கணவனைப் பின்தொடர்ந்து தசமி திதியிலே கணபதிப் பெருமானின் ஓங்கார சோதியில் ஒன்றாய் கலந்தது. அதிசயத்திலும் அதிசயம் என அனைவரும் போற்றும் வண்ணம் அந்த அன்பு உள்ளங்கள் இரண்டும் ஒருவர் பின் ஒருவராய் தம்குல தெய்வமான ஆனைமுக கடவுளின் ஆனந்த புவனத்தில் அமரும் அற்புதம் பெற்றனர். சித்திவிநாயகப் பெருமானின் பொற்பதம் பெற்ற அப்பெருமக்களின் ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்திப்போமாக !!!

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவம் பெற்ற தவசீல தம்பதிகள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவனின் குறளுக்கு இணங்கவும், "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முன்னோர் வாக்கிற்கு இணங்கவும் வந்தோரை வாழவைத்த அக்கரைச் சீமையாம் "மலேசியா" நாட்டிலே அரும்பெரும் சேவைகள் செய்து, இந்நாடு மீண்டு எம்மத்தியில் மிகவும் உயர்ந்த மனிதராகவும், ஒழுக்க சீலராகவும் திகழ்ந்த "தம்பு கணபதிப்பிள்ளை தம்பதிகள்" இன்று எம்மிடையே இல்லை.

"தம்பு அப்பா" என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட தம்பு கணபதிப்பிள்ளை "பிறப்பு உண்டேல் இறப்பு" என்பது இயற்கையின் நியதி. ஆனால் காலத்திற்கு முன் காலன் கவர்தல் தாங்கொணாத்துயரமன்றோ! பிறந்தோம், வாழ்ந்தோம், மறைந்தோம், அது வாழ்க்கையுமல்ல, நீவாழ் - பிறரையும் வாழவை, மானிட வாழ்வின் மனித தர்மம் இது. இதன்படி நூறு வயது வாழ்வார் என்று எதிர் பார்த்தோம். ஆனால் இத்தவசீல தம்பதிகள் ஒன்றாகவே கூடிபேசி அடுத்தடுத்து அமரத்துவம் அடைந்துவிட்டனர்.

அவரின் கூனிய நடையும், பொக்கைவாய்ச் சிரிப்பும் நேர்கொண்ட பார்வையும் திருநீறுபூசிய நெற்றியும் அவரின் கம்பீரத் தோற்றத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.

மூளாய் என்னும் சிறப்புப், புகழ்மிக்க கிராமத்தில் வானளாவ உயர்ந்து நிற்கும். வதிரன்புலோ சித்திவிநாயகரின் அரிய பக்தராக விளங்கிய அத்தவசீல தம்பதிகள் வாழையடி வாழையாக தமது விஸ்வலிங்கம் என்னும் மூதாதையர்களினால் கட்டப்பட்ட ஆலய முன்மண்டபத்தின் அருகே அமைந்துள்ள திருமடத்தின் பராமரிப்பையும் உற்சவகாலங்களில் நிறைகுடம் வைத்து வழிபடுதல் வைகாசி, ஐப்பசி மாத சதுர்த்தி உற்சவத்தையும் அர்த்த சாமப் பூஜையும் திருவிழாக்காலங்களில், திருவிளக்கேற்றலையும் அன்று தொட்டு இன்றுவரை குறைவராது செய்து வந்த தம்பதிகள் ஆவார்கள். நீண்டகாலம் இப்புவியில் வாழும் பாக்கியம் பெற்ற இத்தம்பதியினர் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். வானுலகில் தெய்வத்துள் வைக்கப்படுவார்கள் என்று நம்புகின்றோம். அத் தம்பதிகளின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரம்ஸ்ரீ சி. ஜொனந்தசர்மா
பிரதம அர்ச்சகர்
வதிரன்புலோ சித்திவிநாயகர் முத்துக்குமாரசுவாமி
தேவஸ்தானம் - மூளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பிலும் இணைந்த தம்பதிகள்

சைவநெறியும் தமிழும் மேலோங்கி வளர்ந்த நீர்வளமும் நிலவளமும் அருகருகே அருப்ப சீர் செறிந்த வலிகாமம் மேற்குப் பகுதியில் பல்வேறு சிறப்புக்களையும் உடைய மூளாய்க் கிராமத்திற்கு அங்கு வாழ்ந்த சான்றோர்களால் எப்போதும் தனிப் பெருமை உண்டு. அந்த வரிசையில் நேர்மை, சமூகசேவை, ஆலய திருப்பணி ஆகிய துறைகளில் மேம்பாடுற்று விளங்கியவர்கள். இலட்சிய தம்பதிகள் மறைந்த திரு. திருமதி. தம்பு கணபதிப்பிள்ளை சத்தியலட்சுமி ஆவார்.

தொழில் நிமித்தம் மலாயா நாட்டில் தமது ஆரம்ப தாம்பத்திய வாழ்க்கையை கழித்த இத் தம்பதிகள் இளைப்பாறிய பின் தமது சொந்த கிராமமான மூளாய்க்கு திரும்பி வந்து எந்த நேரமும் சிரித்த லட்சுமிகரமான முகம், அன்பான பேச்சு விருந்தோம்பும் பண்பும் தெய்வ சிந்தனையும் கொண்டவர்களாக தமிழ்க் கலாச்சாரத்தை பேணி இணைபிரியா இலட்சியத் தம்பதிகளாக வாழ்ந்து வந்தனர்.

எமது மண்ணில் யுத்த சூழ்நிலை காரணமாக உருவாகிய நிலைமையால் இவர்களது இரு புத்திரர்களின் வற்புறுத்தலால் சில காலம் கொழும்பு மாநகரில் மாறிமாறி இரு புத்திரர்களுடனும் வாழ்ந்து வந்த காலத்தில் அன்டசன் தொடர்மாடிப்படிகளில் இவ்விருவரும் அமர்ந்திருந்து அளவளாவியதை நீதிபதியாக பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த நான் அடிக்கடி அவதானித்து இவ் இலட்சியத் தம்பதிகளின் அந்நியோன்னியமான வாழ்க்கை முறையை எண்ணிப் பூரிப்படைந்திருக்கிறேன்.

தமது இறுதி நாட்களை தம் சொந்த மண்ணில் கழிக்க வேண்டுமென்ற மனவேட்கையால் கொழும்பிலிருந்து மூளாய்க்கு திரும்பி வந்து தமது இரு புத்திரிகள் சகிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்காக வாழாது தமது இனம், சுற்றத்தார் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் எல்லோர் நலனுக்காகவும் உழைத்து இந்தத் தள்ளாத வயதிலும் எதற்கும் கலங்காத உள்ளமும், மன உறுதியும், இறைபணியும் நினைத்த கருமத்தை செய்து முடிக்கும் ஆற்றலும் கொண்ட இந்த இலட்சிய தம்பதிகளை பார்த்து பலமுறை வியப்புற்றேன்.

ஆண்டவனின் நல்ல அருளினால் இவர்களின் அரும்பெரும் குணங்கள் பிறவியில் இருந்தே இவர்களின் பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் சொரியப் பெற்றிருப்பதனால் அவர்களுடன் பழகுவதில் நாம் அனைவரும் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

எமது மண்ணில் துப்பாக்கிகளினதும் குண்டுகளினதும் ஓசை ஓய்ந்து சமாதான ஒளிக்கீற்று சீறியெழுந்து வருவதனால் தமது இனமும், சுற்றத்தார் அனைவரும் சுயநிர்ணய உரிமையுடைய சுதந்திர புருசர்களாக இனிதே வாழ்வார்கள் என்ற திடமான நம்பிக்கையினாற் போலும் இந்த இலட்சிய தம்பதிகள் இருவரும் இறப்பிலும் இணைந்து உயிர்பிரிந்து ஓய்தார்கள் போலும்.

இலட்சிய தம்பதிகளின் ஆத்மாக்கள் இறைவனின் திருவடியில் நிலையான பேரானந்தத்தில் திளைக்க எம் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

"அன்பே சிவம்"

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

நீதிபதியின் இல்லம்
இல 1 செட்டி தெரு
நல்லூர் யாழ்ப்பாணம்

இ.த. விக்னராசா
மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம்.

21.07.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதாரண தம்பதியர்

மறைந்த பெரியார் திரு. கணபதிப்பிள்ளையும் அவரைப் பின்தொடர்ந்து மறைந்த இணைபிரியாத அவர் மனைவி திருமதி சத்தியலட்சுமியும் ஒரு உதாரண கணவர் மனைவிகளாக வாழ்ந்தார்கள். ஏனெனில் நான் பல தடவைகள் அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருக்கும் பொழுது வைத்தியம் செய்வதற்குப் போயுள்ளேன். கணவருக்கு வருத்தம் என்று பார்க்கப் போனால் அவர் தன் வருத்தத்தை மட்டுமல்ல தன் மனைவிக்கும் வருத்தம், அவவையும் பார்த்து மருந்து கொடுங்கள் என்பார். அதுபோல் மனைவிக்கு வருத்தம் என்று பார்க்கப் போனால் அவ தன் நோயைவிட தன் கணவனின் நோயைச் சொல்லி அவரையும் பார்த்து மருந்து கொடுங்கள் என்பார்.

அவர்கள் வயதான காலத்திலும் ஒருவரை ஒருவர் அன்பாகவும் மிகக் கவனமாகவும் பார்த்தார்கள் அவர்கள் இணைபிரியாத தம்பதியர் என்பதை அவர்கள் தம் மரணத்திலும் காட்டி விட்டார்கள்.

ஊரே பிரமிக்க "அவர்கள் சுற்றமுமாகி தொல்வினை அடையார் தோன்றுவர் வானிடை பொலிந்தே"

Dr. க. நடராசா

மூளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்மாவட்ட உதவிப் பணிப்பாளர் திரு.தி. சிவதட்சணாமூர்த்தி அவர்கள் அமரர்கள் திரு.திருமதி.த. கணபதிப்பிள்ளை தம்பதியினரின் மறைவு குறித்து மனம் நெகிழ்ந்து அளிக்கும் அஞ்சலி உணர்வுகள்**

"காதல் மடப்பிடியோடும் களிருவருவன கண்டேன்" நாவுக்கரசின் நற்றமிழ் தேவாரத்தில் நலத்து ஒலித்திடும் நல்ல அடிகள் இவை. இந்த தேவார அடிகளுக்கு திரு உருவம் தருபவர்கள் திரு.திருமதி. கணபதிப்பிள்ளை தம்பதியினர். இணைபிரியாத அன்பு உள்ளங்கள் அவை. அவையில் நடந்தால் சபையோர் இவர்கள் செழிப்பு சுந்தரம் கண்டு சொக்கிநிற்பர். மகபல பெற்று அகவையில் மூத்து மூளாயின் மூத்த குடிகளாக திகழ்ந்தவர்கள் அமரர்கள் இருவரும். தலைவன், தலைவி என்ற அக ஒழுக்கத்திற்கு இலக்கணமாய் பெற்றோர் பிள்ளைகள் என்ற புற ஒழுக்கத்திற்கு இலக்கியமாய் இலங்கியவர்கள் இத்தம்பதியினர். என் பெற்றோருக்கு அடுத்ததாக என்னால் என்றும் சிந்திக்கப்படும் உற்ற உறவினர்கள் அமரர்கள் இருவரும். மலேஷிய மண்ணின் சம்பந்தம் எமது குடும்பங்கள் இரண்டையும் இன்னும் நெருக்கம்பெறச் செய்யும்.

மிகவும் நேர்மையான, கடமைதவறாத, தம் செயல்களில் திருப்தி பெறும், அடக்கமான அமைதியான அன்பு உணர்வான அதன்வழி அமைந்த மனித உருவங்கள் இவர்கள் இருவரும். குடும்பப்பணி, கோயில் பணி, சமூகப்பணி, என இவர்கள் மூவிடத்தும் செய்த சேவைகள் ஆங்காங்கு உள்ளோர் பலரின் பிணிகளைப் போக்கின.

நிறை மதிக்கும் கறை என்ற குறை உண்டு என்பர் ஆனால் இவர்கள் இரு பேரிடத்தும் குறை என்பதில்லாத நிறைவு நிலைத்து நின்றது. அதனால் என்றும் எமது நினைவலைகளிலே நிலைத்து உதாரணபுருஷர்களாக உலாவி வருகிறார்கள்.

அத்தகைய உத்தமர்களின் ஆன்மாக்கள் உலக நாயகன் திருவடியில் கலந்து உண்மை வாழ்வு பெற என்றும் பிரார்த்திக்கின்றேன். அவர் உறவை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள் சமர்ப்பணம்.

அன்புடன் அஞ்சலிக்கும்
தி. சிவதெட்சணாமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவன் சேவடிக்கீழ் சென்ற தம்பதியினர்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை - (குறள் 47)

என்ற வாக்கிற்கொப்ப இல்லறத்தை நடத்தி வந்த பெரியார் திரு.தம்பு கணபதிப்பிள்ளை அவர்களும் அவர்தம் துணைவியார் திருமதி கணபதிப்பிள்ளை சத்தியலட்சுமி அவர்களும் மூளாயூரில் நீண்டகாலம் வாழ்ந்த தம்பதிகள் என்பதும் இவர்களுக்கு இதற்காகப் பாராட்டிப் பரிசும் வழங்கியதும் நாமறிந்தவையே.

மூளாய் இந்து இளைஞர் மன்றத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட, இந்து சமய மன்றத்திற்கு இருப்பிட வசதி அளித்த பெருமை திரு. தம்பு கணபதிப்பிள்ளை ஐயா அவர்களுக்கு உண்டு. வரதன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகராலய முன் மடத்தை இம்மன்றத்தின் ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு அறையையும், கூட்டங்கள், சமய வகுப்புக்கள், பரீட்சைகள் நடத்துவதற்கு முன்மண்டபத்தையும் தந்துதவி செய்த வேளையில் அம்மன்றத்தின் பொறுப்பாளராகவிருந்து எமக்கு வேண்டிய நேரங்களில் எல்லாம் உதவிபுரிந்து வந்தார். அவர்தம் பாரியாரும் இனிமையாகப் பேசி அனைவரிடத்தில் அன்புபாராட்டி வந்தவர். எமது பாட்டனார் காலம் தொட்டே எமது குடும்பத்தவர்களுடன் நெருங்கிய நட்புறவைக் கொண்டிருந்தனர்.

அமரர்கள் இருவரும் ஒன்றாக ஒருவர் பின் ஒருவராக அதிலும் குறிப்பாக கணவன் எவ்வழி அவ்வழியே தானும் என்ற வகையில் மறுவுலகம் சென்றமைதான் கடவுளின் கிருபை. மணவாழ்வில் ஒன்றிணைந்த இருவரும் விண்ணுலகம் வரை பிரியாது தொடர்ந்தமைதான் வியப்பு - அதுதான் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் உயர்வும் சிறப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்களிருவரும் இவ்வுலகில் இருந்ததுபோல சிவன் சேவடிக்கீழ்ச் சென்று தம்பதியினராக பேரின்பப் பெருவாழ்வை வாழ எல்லாம்வல்ல வரதன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானையும் ஸ்ரீ முத்துக்குமார சுவாமிகளையும் மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மங்களகிரி
மூளாய்
சுழிபுரம்

தங்கமுகுந்தன்
போஷகர் இந்து இளைஞர் மன்றம்
யாழ். மாநகரசபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

## நரசிங்க முதலி வழித்தோன்றல்

முத்துதம்பு + முத்துப்பிள்ளை

- கணபதிப்பிள்ளை
- செல்ழுத்து + நல்லதம்பி
- பராசக்தி + கணபதிப்பிள்ளை

## இராசநாயக முதலி வழித்தோன்றல்

சின்னத்தம்பி + நாகமுத்து

- பெரியதங்கச்சி
- சத்தியலட்சுமி

---

- தவஞானமுத்துமலர் + உதயசங்கரன்
  - சிவசங்கரன்
  - நிரஞ்சலா
- தயாபரமூர்த்தி — யோகேஸ்வரி
  - புவிதரன்
  - கோஷிதரன்
  - பகிதரன்
- சிவயோகஇன்பமலர் + நாகராசா
  - கிரிதரன்
  - சசிதரன்
- மனோகரசிவம் + சாந்தகுமாரி
  - கஜீபன்
  - நிலாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



நன்றி மறவாமையின் நலத்தால் நல்கிடும் நயப்புரை

எமது குடும்பத்தின் தலைவன் தலைவியாய் அமைந்து முறையே 2002-07-02 , 2002-07-05 ஆகிய தினங்களில் சிவபதம் அடைந்த திரு.தம்பு கணபதிப்பிள்ளை , திருமதி கணபதிப்பிள்ளை சத்தியலட்சுமி ஆகிய இருவரதும் அமரத்துவ தினத்திலும், தொடர்ந்த இறுதிக் கிரிகைகள் நிகழ்வுகாலங்களில் -பின்வரும் இருவரதும் ஆத்ம சாந்தி வைபவங்களிலும் கலந்து கொண்டு உதவிகள் பல உளமார நல்கிய உற்றார் உறவினர் நட்பினர் ஆகிய நல்லுள்ளத்தினர்க்கும் அனுதாபச்செய்திகள் துயர்பகிர்வு தொடர்புகள் தந்த தோழமை, உறவுகள், அன்பு பூண்டோர்க்கும், இம் மலரைச் சீர்பெற அமைத்து உதவிய சரணியா கணனிப் பதிப்பகத்தினருக்கும் என்றும் எ அளப்பரிய நன்றிகள்.

அன்புகள் உரித்தாகுக !!!

❋ நன்றி ❋

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அன்புடன் வழங்-

மக்கள், மருமக்கள், ப

மூளாய்,
சுழிபுரம்.

சரணியா ஒவ்(F) செற் பிறின்ரேர்ஸ் ... ங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org